Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 11, 2024

திங்கட்கிழமை மார்ச் 11, 2024 | ஒளி: 09 கதிர்: 209 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## பலசரக்கு பொருட்கள் இறக்குமதி செய்ய அனுமதி



மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை, சாதிக்காய், ஏலக்காய் உள்ளிட்ட பலசரக்கு பொருட்கள் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## "வெடுக்குநாறி மலையில் பொலிஸார் அடாவடி"

### அமைச்சரவையில் பிரஸ்தாபிப்பேன் என்கிறார் டக்ளஸ்

எஸ்.தில்லைநாதன்

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் அடாவடித்தனம் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இன நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் என்றார்.

பளைப் பகுதியில் எரிபொருள் நிலைய திறப்புவிழா நிகழ்வு, சனிக்கிழமை (09) காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் குறித்த விடயம் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், சிவராத்திரிதினம் என்பது இந்துக்களின் முக்கிய சமயம் சார் நிகழ்வாகும். தொடர்ச்சி P2





## ஐ.எம்.எவ் பிரதிநிதிகளுடன் பேச மூவருக்கு அழைப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு, சர்வதேச நாணய நிதியத்தின் ( ஐ.எம்.எவ்.) பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். தொடர்ச்சி P2

## "தண்ணீரை தனியார் மயமாக்கும் யோசனை இல்லை"

விவசாயிகளுக்கு வழங்கப்படும் தண்ணீருக்கு கட்டணம் அறவிடுவது குறித்தோ அல்லது தண்ணீரை தனியார் மயமாக்குவது குறித்தோ எந்தவொரு யோசனையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



# இன்றைய சந்திப்பில் ஐ.ம.ச பங்கேற்காது

தேர்தலை இலக்காக் கொண்ட ஜனாதிபதியின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குள் எதிர்க்கட்சி சிக்கிக் கொள்ளாது என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி, இன்று (11) இடம்பெறவிருக்கும் கலந்துரையாடலிலும் பங்கேற்றாது என்று அறிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில், ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளருமான முஜிபுர் ரஹ்மான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய கூட்டத்தொடர் ஆரம்பித்தன் பின்னர், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) குழுவின் தவிசாளர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்காது ஆளும் தரப்பில் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான நபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தூய அரசாட்சியை முன்கொண்டு செல்ல விருப்பமில்லாத நிலைப்பாட்டையே ஜனாதிபதியும் அரசாங்கமும் தொடர்ந்தும் காண்பித்து வருகின்றன. மக்களைக் கோபப்படுத்தும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றனர்.இந்த செயற்பாடுகளுக்கு ஆளும் தரப்பு மக்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்களில் பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். தொடர்ச்சி P2






## யாழ்.நபரை ஏமாற்றிய பதுளை நபர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரை கனடா நாட்டிற்கு அனுப்பி வைப்பதாகக்கூறி 56 இலட்ச ரூபாய் மோசடி செய்தார் என்றக் குற்றச்சாட்டின் பேரில், பதுளையை சேர்ந்த நபர் ஒருவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர். தொடர்ச்சி P2



## 'யுக்திய'வில் இராணுவம் களமிறங்கும்

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்வதற்கான 'யுக்திய' நடவடிக்கைக்கு இராணுவ அதிகாரிகளின் ஆதரவைத் திங்கட்கிழமை (11) முதல் பெற்றுக்கொள்ளவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

### சபாநாயகருக்கு எதிராக

## 19 விவாதம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சி P2



## ஜனாதிபதி தேர்தலில் இ.தொ.கா அதிரடி முடிவு



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர் பீடமே கூடி முடிவெடுக்கும். எமது தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, அதேபோல, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்க முடியும் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## "மதத்தினால் மனிதம் செத்து விடக்கூடாது"

### இந்து மத பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் கோவில் மஹா சிவராத்திரி தினத்தன்று சைவ சமய மக்களின் வழிபாட்டு உரிமைகள் புனித தன்மைகள் மீறப்பட்டமையினை வன்மையாக கண்டித்துள்ள மன்னார் இந்து மத பீடத்தின் தலைவர் கலாநிதி.சிவஸ்ரீ மஹா. தொடர்ச்சி P2



## "கோட்டாவின் புத்தகம் அர்த்தமற்றது"



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்த நூல்களை எழுதினாலும் அவர் தனது பொறுப்பை நிறைவேற்றவில்லை என தாம் தெளிவாகக் கூறுவதாக அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டார்:

கோட்டாபய ராஜபக்சவை ஆயிரம் நம்பிக்கையுடன் ஆட்சிக்குக் கொண்டு வந்தோம். இறுதியாகத் தலையை தானம் செய்ய ஏற்பாடு செய்தார். நாங்கள் அதை எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்த அவர், அவர் எத்தனை புத்தகங்களை எழுதினாலும் தன் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றவில்லை என்றார்.

## வெடுக்குநாறியில் பொலிஸாரின் அடாவடிக்கு மட்டக்களப்பில் எதிர்ப்பு

கனகராசா சரவணன்



வவுனியா, வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வழிபடச் சென்ற மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பொலிஸாரை கண்டித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் முன்பாக, கண்ட ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் ஞாயிற்றுக்கிழமை (10) ஈடுபட்டனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான, கோ.கருணாகரன், ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இந்து, கிறிஸ்தவ மதகுருமார் கட்சி ஆதரவாளர்கள் உட்பட பலரும் பங்கேற்றனர்.


"தடுக்காதே, தடுக்காதே சிவ வழிபாட்டை தடுக்காதே", தொடர்ச்சி P2

### ஒட்டவா படுகொலை சந்தேக நபருக்கு

## வீடியோ கேம்களால் மன அழுத்தம்

### ஆபத்தான நிலையை கடந்தார் தனுஷ்க

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இலங்கையர்கள் அறுவரை படுகொலை செய்த இளைஞர், மன அழுத்தத்தால் இந்த கொலைகளை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




சந்தேக நபர், கனடாவில் கல்வி கற்கும் 19 வயதுடைய ஃபேப்ரியோ டி சொய்சா என்ற இலங்கையராவார். இந்நிலையில் சொய்சா மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர் என தெரியவந்துள்ளது. தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# "வெடுக்குநாறி மலையில் பொலிஸார் அடாவடி"

இதனை முன்னிட்டு குறித்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அடியவர்கள் சென்றபோது, பொலிஸார் தடுத்து நிறுத்தியது அடாவடியை ஏடுபடுத்துயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிவ பக்தர்களையும், அவர்களின் வழிபாட்டையும் அவமானப்படுத்தும் வகையில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் அவர்களது அடாவடித்தனமாகவே இருக்கின்றது. ஆலய தரிசனம் செய்வது அவரவர் உரிமையாகும் என்றார்.

மேலும், வழிபாடுகளைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது.

இவ்வாறான நிலையில் குறித்த ஆலயப் பகுதியில் பொலிஸார் இவ்வாறான தடைகளையும் அடாவடித்தனங்களையும் செய்வதற்கு யார் அனுமதி கொடுத்தது? அதேநேரம், இதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது என்றார்.

அத்துடன் நடைபெறவுள்ள அமைச்சரவையிலும் இவ்விடயம் தொடர்பில் கொண்டு செல்லவுள்ளேன் என்பதுடன் இனிவருங்காலங்களில் பொலிஸார் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# பலசரக்கு பொருட்கள் இறக்குமதி செய்ய அனுமதி

அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு உள்நாட்டில் குறைந்தபட்சம் 35 வீதம் பெறுமதி சேர்க்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவித்தல் அடங்கிய அதிவிசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, உலர் மஞ்சளை இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பலசரக்கு பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்குக் கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் முற்றாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் டிசெம்பர் 6ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனைக்கமைய, குறித்த பலசரக்கு பொருட்களை மீள் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# "தண்ணீரை தனியார் மயமாக்கும் யோசனை இல்லை"

தண்ணீரைத் தனியார் மயமாக்கப் போவதாகவும் விவசாயத் தேவைக்கான இலவச நீருக்குக் கட்டணம் வசூலிக்கப் போவதாகவும் சில அரசியல் கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றார்.

ஹங்கம-ஹதகல பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் 200 குடும்பங்களுக்குக் கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த திட்டத்தை ஹடபிமா அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

குறிப்பிட்ட அரசியல் கட்சியின் விவசாயிகள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் குழுவினர் விவசாயிகளைத் தவறாக வழிநடத்தும் வகையில் பொய்யான தகவல்களைப் பரப்பி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

# இன்றைய சந்திப்பில் ஐ.ம.ச பங்கேற்காது

எதிர்க்கட்சித் தலைவரைச் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் பல சுற்றுக்களில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். சஜித் பிரேமதாச தமது நிலைப்பாட்டைச் சர்வதேச நாணய பிரதிநிதிகளிடமும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்திலும் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் புதிதாக ஜனாதிபதிக்கு முன்னால் இருந்து கொண்டு எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய எந்த தேவையும் எமக்கில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட உடன்படிக்கைகளை வெளிப்படுத்தவில்லை.உரிய நேரத்திற்கு நாடவில்லை. சேமலாப நிதியங்கள் உழைக்கும் மக்களின் வைப்புத் தொகைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக உடன்பாடுகளை எட்டியுள்ளனர்.

எந்த வித கலந்துரையாடலும் இன்றி, இலாப மீட்டும் அரச நிறுவனங்களை தமது நண்பர்களுக்கு விற்கும் போக்கால் ஊழியர்களே கோபமடைந்துள்ளனர். சகல எதிர்ப்புகளையும் சமநிலைப்படுத்தவே எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய ஆடையை அணிந்து கொண்டு போக வேண்டிய தேவையில்லை என்று அன்று கூறிய இராஜாங்க அமைச்சர் இன்று கோட் அணிந்து கொண்டு அழைப்பு விடுக்கிறார்.

சகல வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு மக்களைக் கஷ்டப்படுத்தி வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு காணப்பட்ட உடன்படிக்கையைத் திருத்தியமைப்போம்.தேர்தலை இலக்காக் கொண்ட ஜனாதிபதியின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குள் எதிர்க்கட்சி சிக்கிக் கொள்ளாது. ஐக்கிய தேசியக் கட்சியும், ரணிலும் எமக்கு எந்த வித சவாலும் இல்லை என்றார்.

# ஐ.எம்.எவ் பிரதிநிதிகளுடன் பேச மூவருக்கு அழைப்பு

அதன்படி, ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு எதிர்க்கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச,தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் கலந்துகொள்ள விரும்பும் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இதில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தின் நிதிக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதோடு, அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் கூட்டுப் பொறுப்புக்கூறல் அவசியமானது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே. எம். மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளனர்.




# யாழ்.நபரை ஏமாற்றிய பதுளை நபர் கைது

பணத்தினை கொடுத்தும் நீண்டகாலமாகத் தனது பயண ஏற்பாடு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் , பணம் கொடுத்தவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பதுளையை சேர்ந்த நபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஜனாதிபதி தேர்தலில் இ.தொ.கா அதிரடி முடிவு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின நிகழ்வுகள் மகளிர் அணியின் தலைவியும், கட்சியின் பிரதி தலைவருமான அனுஷியா சிவராஜா தலைமையில், மகளிர் அணியின் உப தலைவியும், மஸ்கெலியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான செண்பகவள்ளியின் ஏற்பாட்டில் "பொருளாதாரத்தை வலுவூட்டலின் ஊடாக பாலின சமத்துவத்தைத் துரிதப்படுத்தல்" எனும் தொனிப்பொருளின் கீழ் கொட்டகலை சி.எல்.எப். வளாக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

" ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதல் விடயம் மலையகத்தில் வீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். அந்தவகையில் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய சூழ்நிலையை ஜனாதிபதி ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

இரண்டாவது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம். தற்போது சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்குத் தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். இது தற்காலிக தீர்வு மாத்திரமே. எனவே, நிரந்தர தீர்வு என்னவென்பதை ஜனாதிபதி முன்வைக்க வேண்டும்.

இறுதியாகக் காணி உரிமை விடயமாகும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜனாதிபதி 4 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். காணி உரித்தும் வழங்கப்பட வேண்டும். இவற்றைச் செய்து, ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட்டால் அவரை நாம் ஆதரிப்போம்.

கோரிக்கைகளை விடுத்துக்கொண்டும், ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுக்கொண்டும், அறிக்கைகளை விடுத்துக்கொண்டும் அரசியல் நடத்துவதில்லை நாம். சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுத்து வருகின்றோம்.

அதேவேளை, இலங்கையில் மகளிருக்கான ஒதுக்கீடு தொடர்பில் சட்டம் இயற்றுவதற்கு முன்பிருந்தே பெண்களுக்கு இ.தொ.கா முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. பெண்களுக்கு உயர்பதவிகளைக்கூட வழங்கப்பட்டுள்ளது. எனவே, பெண்களை மதித்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளும் ஏற்கப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும்.

எமது பெருந்தோட்டத்தொழில்துறையில் ஈடுபடும் தாய்மாரின், சகோதரிகளின் தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். முன்னெடுத்தும் வருகின்றோம்" என்றார்.

# வெடுக்குநாறியில் பொலிஸாரின் அடாவடிக்கு மட்டக்களப்பில் எதிர்ப்பு

"சிவராத்திரி நாளில் சிங்கள அடக்குமுறை, மனிதத்தை மிதிக்காதே", மத உரிமையைத் தடுக்காதே", "தமிழ் அமைச்சர்களே! வெடுக்குநாறி, மையத்தமடு நிலங்களை விற்று விட்டீர்களா?", "சிவபூசைக்குள் காக்கி கும்பல்கள் ஏன்"?, "பொலிஸாரின் அடக்கு முறையை சர்வதேசமே விசாரி" போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர்.

அரசாங்கத்தையும் பொலிஸாரையும் கண்டித்து அங்கிருந்து ஊர்வலமாக மணிக்கூட்டுக் கோபுர வீதி சுற்று வட்டத்தைச் சுற்றி மீண்டும் காந்தி பூங்காவுக்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

# 'யுக்திய'வில் இராணுவம் களமிறங்கும்

குறிப்பாக போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்படும்போது, இராணுவத்தின் ஆதரவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தல்துவ தெரிவித்தார்.

# 19 விவாதம்

இதேவேளை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தின் புதிய நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.இந்த நிகழ்ச்சி நிரல் கடந்த 7ம் திகதி வெளியிடப்பட்டது.

சாதாரணமாக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து 5 நாட்களுக்குப் பிறகு விவாதம் நடத்தப்படும். இந்த பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 12ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற வாய்ப்பு உள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடியோ கேம்களால் மன அழுத்தம்

படுகொலை செய்யப்பட்ட விக்ரமசிங்க குடும்பம், குறித்த இளைஞரைப் பராமரித்து வந்துள்ளனர். சந்தேக நபர் சீஸ்கேக் விரும்பி சாப்பிடும் ஒருவர் என்பதுடன், குடும்பத்தினரிடம் பலமுறை சீஸ்கேக் வாங்கி கேட்பது வழக்கம். அத்துடன், வீடியோ கேம்கள் விளையாடுவதில் ஆர்வம் கொண்டவர்.

அதேசமயம், கொலைச்சந்தேக நபர், விக்ரமசிங்க குடும்பத்தின் பராமரிப்பில் இருப்பதற்கு முன்னர் வேறொரு இலங்கை குடும்பத்தின் பராமரிப்பில் இருந்துள்ளார்.

அங்கு இவர் வீடியோ கேம்கள் விளையாடுவதில் மிகவும் ஆர்வமாக இருந்துள்ளார். இந்நிலையில் இவர், அந்த வீட்டில் ஒழுங்கற்ற முறையில் செயற்பட்டதால் வீட்டின் உரிமையாளர்கள் இவரை வீட்டை விட்டு வெளியேற்றியுள்ளனர்.

இதன்போது, தனுஷ்க விக்ரமசிங்க என்பவர் குறித்த இளைஞரைப் பராமரிப்பதற்காக அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். புதிய சூழல் என்றாலும், குறித்த இளைஞர் விக்ரமசிங்க குடும்பத்தின் பராமரிப்பில் நீண்ட நாட்களாக வாழ்ந்து வந்துள்ளார்.

குறித்த இளைஞரின் மன அழுத்தப் பாதிப்பே இந்த கொலை சம்பவத்துக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்த சம்பவத்தில் காயமடைந்த குடும்பஸ்தரான தனுஷ்க விக்ரமசிங்க ஆபத்தான நிலையைக் கடந்துள்ளதாகக் கனடா ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடாவின் ஒட்டாவாவின் புறநகர் பகுதியான பெர்ஹெவனில் ஒரே



குடும்பத்தைச் சேர்ந்த 6 இலங்கையர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கையர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுக்கு டொரண்டோவில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

# "மதத்தினால் மனிதம்...

தர்மகுமாரக் குருக்கள் மதத்தின் பெயரால் மனிதம் செத்து விடக் கூடாது எனக் கேட்டுக்கொண்டார்.

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் கோவில் மகா சிவராத்திரி பூசையின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டு மொத்த இந்து சமூகத்தையும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றது என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப் புனிதமான விரத நாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு மிக மோசமாகச் சைவ சமய விழுமியங்களைப் புனித சடங்குகளை அவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

சைவ சமயத்தின் புனிதத்தன்மையினை சீரழிக்கும் இந்த செயல்கள் மிகப் பாரதூரமானவை இச்செயல் சைவத்தமிழர்களின் மனதை மிகவும் காயப்படுத்தியுள்ளன.

இச் செயற்பாடு அடிப்படை வழிபாட்டு உரிமை மீறும் செயற்பாடு

என்பதைச் சைவ உலகிற்கும் சொல்ல வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் மஹாசிவராத்திரி ஆகும் என்றார்.

யுத்தம் முடிந்து சர்வமதங்களும் இப்போது தான் புரிந்துணர்வுடன் ஒன்றாக இணைந்து பயணிக்கும் வேளையில், மீண்டும் ஒரு பிளவினை உருவாக்கியிருக்கும் இச் செயல் மத நல்லிணக்கத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.அந்த வகையில் இந்த சிவராத்திரி தினத்தில் தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் ஆதி சிவன் கோவிலில் நடைபெற்ற மோசமான சம்பங்களை அராஜகங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பல்கலைக்கழக மகளிர் தின கொண்டாட்டம்

SLFUW ஆனது 'சர்வதேச மகளிர் தினத்திற்காக ஒரு இலட்சியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது, இந்த ஆண்டின் 'பெண்களில் முதலீடு செய்யுங்கள்; முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துங்கள்' என்ற ஐ.நா கருப்பொருளுக்கு இணங்க தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

SLFUW, தலைவர் கேணல் டொக்டர் உதுலா கிருஷ்ணரத்ன, இதுபற்றி விளக்குகையில், நடைமுறையில் இதன் அர்த்தம், 'ஒவ்வொரு துறையிலும் பெண்களை உள்வாங்க ஊக்கமளிக்கப்படுகின்றது' ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கு இது உதவும். இது 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்குத் தரமான கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகலை வழங்க வேண்டும்' என்பதை உணர்த்துகிறது.





எனவே, SLFUW, பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான பின்தங்கிய பெண் இளங்கலைப் பட்டதாரிகளுக்கு 16 புலமைப்பரிசில்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது, குடும்பத்தில் உள்ள பிரச்சினைகளால் மோசமான நிலையில் உள்ள ஒரு மாணவருக்குப் பெப்ரவரி 27 அன்று முன்கூட்டியே இந்த புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. ஏனைய 15 உதவித்தொகைகள் பெண்கள் தினக் கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக வழங்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பாடநெறி அவர்களின் ஆளுமை மற்றும் சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கும், அதன் மூலம் அவர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் வசதிகள் மேற்கொள்ளப்படும்.

வெவ்வேறு வயது பிரிவுகளில் மற்றும் பாடசாலைகளில் பயிலும் பெண் பிள்ளைகளும் இதேபோன்ற திட்டத்தின் பயனாளிகளாக இருப்பார்கள், இதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் அறிவையும் திறன்களையும் பல்கலைக்கழகத்திலோ அல்லது வெளியிலோ வளர்த்துக் கொள்வார்கள்.

மொனராகலை மாவட்டத்தில் வருமானம் குறைந்த கொண்ட பிரதேசமான சியம்பலாண்டுவவிலுள்ள கந்தவுடபங்குவ தேசியப் பாடசாலைக்குச் சென்று, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முப்பரிமாண திறந்தவெளி கணித ஆய்வகத்திற்கான தொழில்நுட்பப் பொருட்களைப் பெறுவதற்கு பணப் பங்களிப்பை SLFUW செய்தது. அதிபரின் பரிந்துரையின் பேரில் உதவி தேவைப்படும் நான்கு மாணவிகளுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# காணி மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் உள்ள காணியொன்றை மோசடியாக உரிமை மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் பகுதியில் மூவருக்கு சொந்தமான காணி ஒன்றினை, ஒருவர் காலமான நிலையிலும், இன்னொருவர் வெளிநாட்டில் வசித்து வந்த நிலையிலும், மற்றையவர் தனது பெயருக்கு காணியை உரிமை மாற்றம் செய்துக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அறிந்து கொண்ட வெளிநாட்டில் வசித்து வந்த நபர், தனக்கு தெரியாமல் தனக்கு சொந்தமான காணியை உரிமை மாற்றம் செய்து மோசடியில் ஈடுபட்டுள்ளார் என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மோசடியான முறையில் காணி உரிமை மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் உணவகம் ஒன்றுக்கு சீல்

எஸ் . தில்லைநாதன்

யாழ்ப்பாணம்-சண்டிலிப்பாய் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு , சீல் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம், 73 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதியில் பொது சுகாதார பரிசோதகரான செ.பிரின்சன் தலைமையில் உணவகங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது, உணவகமொன்றிலிருந்து பழுதடைந்த, 180 கிலோ றொட்டிகள், 05 கிலோ இடியப்பம் மற்றும் 08 கிலோ பிட்டு என்பவற்றை பொலித்தீன் பைகளில் கட்டி குளிர்சாதன பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்திற்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், உணவக உரிமையாளருக்கு 73,000 ரூபாய் தண்டம் விதித்த நீதிமன்று, உணவகத்தை சீல் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, பழுதடைந்த இறைச்சி மற்றும் இறால் ஆகியவற்றை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த



உணவக உரிமையாளருக்கு 20,000 ரூபாய் தண்டமும், பழுதடைந்த இறைச்சி றொட்டியை விற்பனைக்கு வைத்திருந்தமை மற்றும் உணவகத்தை சுத்தமின்றி பேணிய மற்றுமொரு உணவக உரிமையாளருக்கு 33,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மல்லாகம் நீதவான் நீதிமன்று, நியாயதிக்கத்திற்குட்பட்ட 06 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளில் சுமார் 03 இலட்சம் ரூபாய் தண்டம் விதித்த நிலையில், சில உணவகங்களைச் சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# அடிக்கல் நாட்டும் விழா...

கொழும்பு–12, ஹமீட் அல் ஹுசைனியா பாடசாலையின் பழைய மாணவரும், தொழிலதிபரும், light for life நிறுவனத்தின் பணிப்பாளருமான அல்ஹாஜ் இப்பாஸ் பாரூக்கின் நிதியுதவியுடன், கொழும்பு –12 ஹமீட் அல்ஹுசைனியா பாடசாலைக்கு 15 புதிய வகுப்பறைகள், கேட்போர்கூடம் மற்றும் புதிய கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு புதன்கிழமை (06) இடம்பெற்றது.

# 60 இலட்சம் கையாடல் செய்த யுவதி

எம்.றொசாந்த்

வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி, ஒருவரிடமிருந்து 60 இலட்சம் ரூபாய் பணத்தைப்பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் 27 வயதான யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு பகுதியைச் சேர்ந்த குறித்த பெண், யாழ்ப்பாணம் நகரப் பகுதியை அண்மித்த பிரதேசங்களில், வெளிநாடு செல்பவர்களுக்கான தொடர்பகம் என, வெளிநாடு செல்ல விரும்புவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கல், விசா தொடர்பிலான தெளிவூட்டல்கள் போன்ற சேவைகளை கட்டணம் பெற்று வழங்கி வந்துள்ளார்.

இந்நிலையில், அவரை நம்பி ஒருவர் சுமார் 60 இலட்சம் ரூபாய் பணத்தை வழங்கியுள்ளதுடன் தனது வெளிநாட்டுப் பயண ஏற்பாடுகள் தாமதமாகி வந்தமையால், அப்பெண் மீது சந்தேகம் கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அப்பெண்ணைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது அவரது வங்கி கணக்கு இலக்கம்




ஊடாக சுமார் 4 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளதினை கண்டு பிடித்துள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட இதர பகுதிகளில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் முகவர்களாகச் செயற்படும் மோசடியாளர்கள், யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் தமக்கான முகவர்களாகச் சிலரை நம்பிக்கைக்காக அமர்த்தி பெரும் பணம் மோசடியில் ஈடுபட்டு வருகின்றதாகவும் இவர்கள் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி

பாடசாலை மற்றும் புறச்சூழலில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தி அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர்களுடன் தொடர்புபட்ட கல்வி மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளை தெளிவூட்டும் வகையில், ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புதன்கிழமை (06), வியாழக்கிழமை (07) ஆகிய தினங்களில்



இடம்பெற்றுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு குறித்த பயிற்சி செயலமர்வினை ஏற்பாடு செய்திருந்தது.

பாடசாலை மாணவர்களின் உளநல ஆரோக்கியம், பாடசாலை பருவத்தில் நிகழும் உடல், உள மாற்றங்கள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மன அழுத்தம், மாணவர்களை பகடிவதை செய்தல், தகவல் தொழில்நுட்பமும் அதன் ஊடாக ஏற்படும் சாதக பாதகங்களும், போதைவஸ்து பாவனையில் ஈடுபடுவதற்கான அடிப்படை காரணங்களும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகளும், விசேட தேவையுடைய பிள்ளைகளை கண்டறிதலும் மருத்துவ ஆலோசனையும் என இந்நிகழ்வின்போது பல்வேறு தலைப்புகளில் விரிவுரையாற்றப் பட்டுள்ளது.

# முதலை கடித்து பெண் படுகாயம்

நடராசா கிருஸ்ணகுமார்




முதலையினால் கடியுண்டு படுகாயமடைந்த நிலையில் பெண்ணொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் கடந்த வியாழக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பின் மன்னாகண்டல், வசந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 47 வயதுடைய சாமிநாதன் விசாலாட்சி என்ற பெண்ணே இவ்வாறு முதலையினால் கடியுண்டு காயமடைந்துள்ளார்.

குறித்த பெண் தமது வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் ஆடுகளைக் குடிநீருக்காகப் பேராற்றிற்குக் கொண்டு சென்றபோதே, முதலை குறித்த பெண்ணின் வலது கையினை கடித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த பெண் உடனடியாக முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரியவந்துள்ளது.

இதேபோன்று 20 நாட்களுக்கு முன்னரும் இப்பகுதியில் மாடு மேய்ச்சலில் ஈடுபட்ட ஒருவர் பேராற்று பகுதிக்குச் சென்றபோது முதலையினால் கடியுண்டு காலில் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேலை நிறுத்தம்

மத்திய தபால் பரிவர்த்தனை கட்டடத்தில் சுமார் ஒரு வருட காலமாகச் செயலிழந்த நிலையிலுள்ள கட்டிடத்தின் மின்தூக்கியைச் சீர் செய்யாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை (10) நள்ளிரவு முதல் அடையாள வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தொழிற்சங்க முன்னணியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், மின்தூக்கி செயலிழந்த நாள் முதல் தபால்களை எடுத்துச் செல்வதில் தபால் ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும், இது குறித்து அதிகாரிகளுக்குப் பலமுறை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த 24 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தின் மூலம் தபால் அதிகாரிகளின் கவனம் மின்தூக்கியின் மீது செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இல்லையேல் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பேச்சாளர் கூறியுள்ளார்.

# கண்காட்சிக்கு கஞ்சாவுடன் சென்ற பெண்

நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் இலங்கை விமானப்படையின் கண்காட்சிக்குக் கேரள கஞ்சாவுடன் சென்ற பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (10) கைது செய்யப்பட்டுள்ளார் .

நயினாதீவைச் சேர்ந்த 26 வயதான பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம்-2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் - முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்றுவருகிறது.

இதன்போது கண்காட்சி பிரதான நுழைவாயில் அருகிலுக்கு, குறித்த பெண் பொதியுடன் வந்த நிலையில், அவரை சோதனையிட்டபோது இரண்டு கிலோ கிராம் எடையுள்ள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் விமானப்படையினரால் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

## போதைப்பொருள் விருந்து

# 6 பேருக்கு விளக்கமறியல்; 19 பேருக்கு பிணை

ஹோமாகம-மாகம்மத அதிசொகுசு வீட்டுத் தொகுதியில், சர்வதேச பெண்கள் தினத்தன்று, பிறந்தாள் நாள் கொண்டாட்டத்தை நடத்தி, போதைப்பொருள் விருந்தில் பங்கேற்றனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர், யுவதிகள் அடங்களால 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில், அதில், போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவரும், பணத்துக்கு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் பெண்கள் மூவரும், கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதில், அறுவர், எதிர்வரும் 14ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு, பதில் நீதவான் ஒஷார ஜயகொடி உத்தரவிட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில், பல்கலைக்கழக மாணவி ஒருவரும் அடங்குகின்றார்.

பணத்துக்காக வந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்களிடம் சமூக நோய்கள்



தொடர்பில் பரிசோதனையை மேற்கொண்டு, அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கு பதில் நீதவான் உத்தரவிட்டார் போதைப்பொருளை வைத்திருந்த இரண்டு இளைஞர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதிசொகுசு வீட்டு சோதனை செய்த பொலிஸார், தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் 17 பேர் உட்பட 27 பேரைக் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்த இளைஞர்கள் மற்றும் பணத்திற்காக வந்ததாகக் கூறப்படும் இளம் பெண்கள் தவிர, மீதமுள்ள 19 இளைஞர்கள் மற்றும் யுவதிகள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# கவனம் செலுத்தாவிடின் விளைவுகள் ஆபத்தானவை

அனைத்து உயிரினங்களும் உணவின் மூலம் வாழ்கின்றன. அத்துடன், உணவு என்பது மனிதனின் அடிப்படைத் தேவை. அதனால் உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், உணவு பாதுகாப்பு உணவின் உயர் ஊட்டச்சத்து தரத்திற்குச் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும். எப்படிச் சாப்பிடவேண்டும் என்று சொல்லப்படும் கொடுமையான விதிக்கு ஆளாகும் மக்களுக்குச் சத்தான உணவு கிடைப்பதில்லை என்பது முழு உண்மை.

உணவகங்களில் உணவு மற்றும் பானங்களின் விலை கடந்த 3ஆம் திகதி நள்ளிரவு முதல் உயர்த்தப்பட்டுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது. எனினும், விலைகளைக் குறைக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது மின்சாரக் கட்டணம் குறைவதே இதற்குக் காரணமாகும்.

இந்த நாட்டில் அரிசி விலையை அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானிக்கின்றனர். பஸ் கட்டணத்தை பஸ் சங்கம் முடிவு செய்கிறது. உணவகங்கள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தால் உணவு விலை நிர்ணயிக்கப்படுகிறது. அப்படியாயின், ஒரு நாட்டுக்கு அரசாங்கம் ஏன் தேவை? என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அது செயல்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. நாட்டில் வர்த்தக அமைச்சர் ஒருவர் இருப்பதாகக் கூறப்பட்டாலும் அமைச்சரின் பொறுப்பு என்ன என்பது தெரியவில்லை. நாம் இப்படி ஒரு திரிக்கப்பட்ட நாட்டில் வாழ்கிறோம்.

உணவுப் பொருட்களின் உற்பத்திச் செலவு அதீதமாக அதிகரித்துள்ளமையினால் உணவு மற்றும் பானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகச் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்திருந்தார். எந்தவொரு வகையிலும் அரசாங்கம் நுகர்வுப் பொருட்களின் விலையைக் குறைத்தால் மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சமைக்க வசதியில்லாத தங்கும் அறைகளில் ஏராளமானோர் வசிக்கின்றனர். மேலும், அவசரமான கால அட்டவணையின் காரணமாகக் கடைகளில் சாப்பிட்டு நாட்களைக் கடத்துபவர்கள் ஏராளம்.

இலட்சக்கணக்கான மக்களின் முக்கிய வாழ்வாதாரம் உணவு என்பதை மறந்துவிடக் கூடாத முக்கியமான விடயம். இவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து, மக்கள் அதிகளவில் கடைகளை விட்டு வெளியேறும் நிலையும் உள்ளது. இதனால் உணவகங்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விலைவாசியை மேலும் உயர்த்தினால் உணவுத் தொழில் முற்றிலும் அழிந்துவிடும். இந்த விடயத்தில் கவனம் செலுத்தப்படாவிட்டால், விளைவுகள் ஆபத்தானவை.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பி வைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# சூடு கண்டும் அடங்காப் பூனைகள்

**லக்ஸ்மன்**

சூடுகண்ட பூனைகள் பல நம் நாட்டில் இருக்கின்றன. சில பூனைகள் ஒதுங்கிக் கொள்வது வழமையாக இருந்தாலும் சில மீண்டும் மீண்டும் அடுப்படிக்கு வந்து அந்தச் சூட்டியின் கதகதப்பினை அனுபவிக்க துடித்துக் கொண்டே இருக்கும். அவ்வாறானவர்களும் இருக்கத்தான்செய்கிறார்கள்.

அடுப்பங்கரைப் பூனைகளை நினைவுபடுத்தும் வகையிலான சில முக்கியமான நிகழ்வுகள் கடந்த வாரத்தில் நடைபெற்றன. ஒன்று பதவி விலகி நாட்டைவிட்டுச் சென்ற முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வருகை, இரண்டாவது வாக்களித்த மக்களாலேயே "வேண்டாம் வீட்டுக்குப் போ" என விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புத்தக வெளியீடு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு. இவையெல்லாமே ஒருவகையில் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியாக இருக்கின்ற நேரத்திலேயே அதிலிருந்து மஹிந்த தரப்பினர் பிரிந்து சென்று உருவாக்கப்பட்ட கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. இக்கட்சி ஓர் அரசியல் கூட்டணியே. ஸ்ரீய கட்சிகளாகவிருந்த இலங்கை தேசிய முன்னணி, நமது இலங்கை சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து 2016 நவம்பரில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியாக மாறிக்கொண்டன. ஆரம்பத்தில் இதன் தலைவராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டத்தரணி சாகர காரியவாசம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காரியவாசம் இலங்கை சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஒருங்கிணைப்பாளராவார். பின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராசபக்ச தலைவராகவும், பசில் ராஜபக்ஷ தேசிய அமைப்பாளராகவும் இருந்தனர். இப்போது தேசிய அமைப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

ஆனாலும், அக் கட்சியின் பிரதான செயற்பாட்டாளராக பசிலே இயங்குகிறார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2016ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருந்தாலும் 22018 பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இக்கூட்டணி தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு, இலங்கையின் 340 சபைகளில் 126 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி பெரும் வெற்றி பெற்றது. பின்னர் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்டு 52.25 சதவீதமான 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். தன்னுடைய வெற்றியினை சிங்கள மக்களின் வெற்றியாக அவர் காட்டியது மாத்திரமல்லாமல், அனுராதபுரத்தில் பதவிப்பிரமாணமும் செய்துகொண்டார். 2019 ஜனாதிபதித் தேர்தலில் தேசியவாத சார்பு, பொருளாதார வளர்ச்சி, தேசியப் பாதுகாப்பு போன்ற கொள்கைகளை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர்
2000ஆம் ஆண்டு நடைபெற்ற 2020 பாராளுமன்றத் தேர்தலில் 145 இடங்களைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரு வெற்றி பெற்றது.

2019 நவம்பர் 18 முதல் 2022 ஜூலை 14 வரையில் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தனது மூத்த சகோதரர் மஹிந்த ராசபக்சவின் ஆட்சியில் 2005 முதல் 2015 வரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுச் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் இருபதாவது திருத்தம் மூலம் தனது பதவி அதிகாரங்களை அதிகரித்தார். தனது குடும்ப உறுப்பினர்கள் பல அதிகார பதவிகளுக்கு நியமித்தார். அது முதல் விமர்சனத்தினை ஏற்படுத்தியது. கொவிட்-19 தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் வெற்றிகரமாக நாட்டை வழிநடத்தியதாகக் கூறினாலும், பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கமானது 1948இல் சுதந்திரமடைந்ததன் பின்னரான காலத்தில் முதல் தடவையாகக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றது. இந்த உண்மையை பொதுவெளியில் அறிவிக்கும் நிலை ஏற்பட்டது. இது ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் முறைகேடு காரணமாகவே ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு மக்களால் முன்வைக்கப்பட்டது.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி அக்கட்சியின் அரசாங்கம் என்றிருந்த மகிந்த தரப்பினருக்கு எதிராக எழுந்த பிரச்சினைகள் காரணமாக ஜனாதிபதி பதவி, பிரதமர் பதவி, நிதி அமைச்சர் பதவி என அனைத்துமே பறிபோன நிலையில் மீண்டும் அதனைக் கட்டமைக்கும் பணி இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்ற வழக்குகள், நெருக்கடிகள் என இருந்த நிலையிலிருந்து மீண்டு நாட்டைவிட்டு அமெரிக்கா சென்றிருந்த பசில் ராஜபக்ஷ கடந்த வாரத்தில் நாடு திரும்பியதுடன் மீண்டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினை மீளவும் கட்டமைக்கின்ற பலப்படுத்துகின்ற வேலைகளை ஆரம்பித்திருக்கிறார்.

அதேநேரத்தில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டிருக்கும் ~ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி' எனும் நூல் பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல்வேறு விடயங்கள் சிங்களப் பேரினவாதச் சிந்தனையைத் தூண்டுவதாகவும், வெளிநாடுகள் பலவற்றைச் சாடுவதாகவும் அமைந்திருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

முக்கியமாக, தன்னுடைய வெளியேற்றத்துக்குக் காரணமாக இருந்த அரகலய போராட்டத்திற்கு தமிழ், முஸ்லிம்களே முக்கியமானவர்களாக இருந்தார்கள். தன்னுடைய ஆட்சி நீடித்தால், சிங்கள பௌத்தர்கள் மேலும் பலப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே இப்போராட்டங்களில் அவர்கள் தூண்டப்பட்டிருப்பார்கள் என்று கூறுவதிலிருந்து அவருடைய சிங்கள மேலாதிக்க மனோநிலையை வெளிப்படுத்தியிருக்கிறார் என்றே கூறமுடியும். அந்தவகையில், பசிலின் வருகையும் கோட்டாபய வின் புத்தக வெளியீடும் ஜனாதிபதியுடனான மற்றும் ஏனைய சந்திப்புக்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பலப்படுத்துவதாகவே அமைந்திருப்பதாகக் கொள்ளமுடியும். இந்த இடத்தில்தான் பதவிக் காலத்தில் தீவிர அலட்சியம் மற்றும் தவறான நிர்வாகத்தின் காரணமாக பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியதாக மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டார்கள்.

நாட்டில் தேர்தல்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதையடுத்து உருவாக்கப்படும் சூழல்கள் எதனை இலக்காகக் கொண்டவை என்பது வெளிப்படையாகும். 2022 ஏப்ரலில் உருவான பொது மக்களின் அதிகரித்த எதிர்ப்பு ஜூலை மாதத்தில் முடிவுக்கு வந்தது. ஆனாலும், மீண்டுமொரு போராட்டம் நடைபெறாது என்ற கருத்தோ, ஒரு மக்கள் புரட்சி வேறு வகைகளில் உருவாகாதென்ற உறுதிப்பாடோ நாட்டிலில்லாத நிலையில் இவ்வாறான முயற்சிகள் வெற்றியளிக்குமா என்பது மக்களது தீர்ப்பிலேயே தங்கியுள்ளது. கோட்டாபய நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில் பிரதமராகி, தற்காலிக ஜனாதிபதியாகி, பாராளுமன்றத்தின் ஊடாக 9ஆவது ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கும் ரணில் நாட்டின் வன்முறையை அடக்கி, சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகளைப் பெற்று முன்னகர்த்திக் கொண்டிருக்கிறார். இந்த முன்னெடுப்பு நாட்டை முன்னேற்றுகிறார் என்ற மனோநிலையை குறிப்பிட்டளவான மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது. அதேநேரத்தில், இவ்வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலும், அடுத்த வருடத்தில் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இவ்வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலும், அடுத்த வருடத்தில் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்புகள் வெளிவந்தது முதல், யார் யாருடன் கூட்டுச் சேர்வது, எந்தக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவது, யாருடைய கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் போட்டியிடுவது என பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், பசிலின் வருகையும் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலும் சிலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றன. முதலில் பாராளுமன்றத் தேர்தலை எதிர்பார்ப்பவர்களுக்கு அது மகிழ்ச்சியான செய்திதான். இருந்தாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முயற்சி மீண்டும் ஒரு தேவையற்ற நிலையை நாட்டுக்கு ஏற்படுத்தாமலிருந்தால் சரி. என்றாலும் அதிகாரப் பசி யாரைவிட்டது. இது சூடு கண்ட பூனையை நினைவுபடுத்தாமல் இருந்தால் சரி.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவரிடமும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, அன்பான நட்பின் வழியைக் கைப்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்கலாம் என்பது முடியாத காரியமாகும். வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைக்க, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசும்போது அது ஏற்படும்.

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கே கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை வணங்கும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வெள்ளம் வடிந்தோட வழி செய்யுங்கள்



முல்லைத்தீவு - அளம்பில், செம்மலை கிராமங்களில் மழை வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் மக்களின் குடியிருப்புக்குள் தேங்கி நிற்பதாக மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரத்திலிருந்து கொக்குளாய் வரையான 36 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கும் போது நீர் வழிந்தோடக் கூடிய வகையில் மதகுகள் அமைக்கப்படாமலும் உயரமான முறையிலும் அமைக்கப்பட்டதன் காரணமாகக் கடலுக்குள் செல்ல வேண்டிய நீர் பல இடங்களில் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்கு போன்ற அபாய நோய்கள் பரவுவதற்கான சூழல் உருவாக உள்ளதுடன் திறந்த கிணறுகளின் நீரும் அசுத்தமடையும் நிலைமை காணப்படுகின்றது.

கரைதுறைபற்று பிரதேச சபை கிராமங்களின் மத்தியில் தேங்கி நிற்கும் மழை நீரினை கடலில் சென்றடைவதற்கான வாய்க்கால்களை அமைக்க வேண்டும். உடுப்புக்குளம், உப்புமாவெளி, செம்மலை, அளம்பில் ஆகிய கிராமங்களில் இந்நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக அளம்பில் கிராமத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தொடக்கம் 13 கிலோ மீற்றர் வரையான முல்லைத்தீவு கொக்குளாய் வீதியிலேயே மழை வெள்ளம் அடிக்கடி தேங்கி நிற்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

– நடராசா கிருஸ்ணகுமார்

# Health on Wheels அலகுகள் கையளிப்பு வைபவம் கொழும்பில் முன்னெடுப்பு

From the People of Japan
UNFPA SRI LANKA

ஆசிய பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பியோ ஸ்மித் மற்றும் இலங்கைக்கான பதில் ஜப்பானியத் தூதுவர் கொட்டாரோ கட்சுகி ஆகியோர், மூன்று 'Health on Wheels' அலகுகளை, சுகாதாரத் துறை அமைச்சர் வைத்தியர். ரமேஷ் பத்திரனவிடம் கையளித்திருந்தனர். இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

ENSURE - ஆயுள் காக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத்தை அணுகுவதை உறுதி செய்தல், பாலின வன்முறை தவிர்ப்புகளை ஏற்படுத்தல் மற்றும் பெண்கள், மகளிர் மற்றும் பின்தங்கிய குழுக்களுக்குப் பதிலளிப்பு சேவைகள் எனும் திட்டத்துக்கு, ஜப்பானிய அரசாங்கம் நிதி வசதிகளை வழங்குகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான உதவியாக 4.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் திட்டத்தின் அங்கமாக இது அமைந்துள்ளது. பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு உதவும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சூரிய ஒளியினால் வலுவூட்டப்பட்ட இந்த நடமாடும் சிகிச்சை நிலையங்களில், அத்தியாவசிய மகப்பேறு மற்றும் இனப்பெருக்க சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குகின்றன. தற்போதைய நெருக்கடி நிலையில், இடர்களுக்குப் பின்னரான சூழலில் பின்தங்கிய சமூகங்களுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளது.

Health on Wheels அலகுகளினூடாக சமூகங்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதுடன், அத்தியாவசிய சுகாதார பராமரிப்பு சேவைகளை எப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், நேரடியாக தேவையுடையவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்யும். ஒவ்வொரு நபருக்கும் தரமான சுகாதார பராமரிப்புக்கு அணுகலைக் கொண்டிருப்பது எனும் UNFPA இன் அர்ப்பணிப்பின் பிரகாரம் இந்த நடமாடும் சிகிச்சைப் பகுதிகள் அமைந்துள்ளன.

இலங்கையின் சமூகத்தாருக்கு வலுவூட்டும் வகையிலும், சுகாதார நிலைகளை மேம்படுத்தும் வகையிலும் எமது திரண்ட முயற்சிகளில் முக்கிய மைல் கல்லாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

# SLT–MOBITEL இடமிருந்து 'The Directory' 2023/24 அறிமுகம்



நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் (MSMBs) சகல சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர தீர்வுகளுக்கான ஒரே நிலையமான SLT Digital Services (Pvt) Limited (SLT-DIGITAL), இனால் மேம்படுத்திய 'The Directory' 2023/24 (The Rainbow Pages), தேசிய வியாபார தொலைபேசி விவரக்கோவை வெளியிடப்பட்டுள்ளது.

'The Directory' 2023/24 என்பது தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையின் பிந்திய வெளியீடாக அமைந்திருப்பதுடன், நாட்டில் வியாபார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான புதிய சாதனமாகவும் அமைந்துள்ளது. பாவனையாளருக்கு நட்பான வழிகாட்டலினூடாக, பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதி சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

'The Directory' இல் இலங்கையின் 10,000க்கும் அதிகமான தினசரி ஒன்லைன் தேடல்கள் பதிவாவதுடன், இலங்கையின் ஒரே தேசிய வியாபார தொலைபேசி விவரக்கோவை எனும் தனது நிலையையும் கொண்டுள்ளது. 6,000க்கும் அதிகமான வியாபார நிறுவனசார் பதிவுகள், 170,000 சிறு விளம்பர பதிவுகள் மற்றும் உறுதி செய்யப்பட்ட பதிவுகள் மற்றும் அரச நிறுவனங்கள் சேவைகள் பிரிவுகள் மற்றும் சமய வழிபாட்டுத் தலங்கள் போன்றனவும் அடங்கியுள்ளன.

மேம்படுத்தப்பட்ட தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவை 2023/24 இல், ஹார்ட்வெயார், நிர்மாணம், மின்சாதனங்கள், இலத்திரனியல் போன்ற பல்வேறு பிரிவுகளுக்கான தேடல்களை நிவர்த்தி செய்யும் உறுதி செய்யப்பட்ட தகவல்கள் அடங்கியுள்ளன.

இந்த விவரக் கோவையில் பதிவிடுவதனூடாக, வியாபாரங்களுக்குக் குறிப்பாக Business to Business (B2B) மற்றும் MSMBs களுக்கு Search Engine Optimization (SEO) அணுகும் வசதி வழங்கப்படுகின்றது.

சர்வதேச இணையத் தேடல் என்ஜின்களுக்கு உகந்த வகையில் இந்த விவரக் கோவை வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் கூகுள் தேடல்களில் தென்படக்கூடிய வகையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், உயர்தர பதிவிடல் மற்றும் விளம்பர பகுதி போன்றன அதிகளவு வாடிக்கையாளர்களை கையகப்படுத்துவதற்கு வலுவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

பதிவிடப்பட்ட மற்றும் உள்ளடக்கப்பட்டுள்ள வியாபாரங்களுக்குக் காணப்படும் மற்றுமொரு வாய்ப்பாக, அரசாங்கத்தின் டென்டர்களுக்கு சேவை வழங்குநர்களாகத் திகழ்வதற்குரிய தகைமையாக அமைந்திருப்பதாகும். விற்பனையாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், அனுமதியளிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் தொடர்பான அரச திறைசேரி சுற்றறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

SLT Digital Services (Pvt) Ltd இன் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “2022 ஆம் ஆண்டில் இறுதியான வியாபார தொலைபேசி விவரக் கோவை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிறுவனம் தனது பிரதான கவனத்தை டிஜிட்டல் மற்றும் ஒன்லைன் அப்ளிகேஷன்களில் காண்பிப்பதற்கு நகர்த்தியிருந்தது. சுமார் 80மூ ஆன அச்சு விளம்பரதாரர்கள் தொடர்ந்தும் 2023/24 “The Directory” இல் மற்றும் அதன் ஒன்லைன் பதிப்பிலும் தமது விளம்பரங்களைப் பதிவு செய்ய முன்வந்திருந்தனர்.

எமது பங்காளர்களுக்குத் தொடர்ச்சியாகப் பெறுமதியை ஏற்படுத்தி வருவது என்பது எமது பிரதான மூலோபாயங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. அதனைக் கவனத்தில் கொண்டு, எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு தமது வர்த்தக நாம தகவல்களைப் பரவலாக்கம் செய்வதற்காக, நாம் தற்போது பரந்தளவு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தீர்வுகள், இணையத் தீர்வுகள், பொருளடக்க விருத்தி போன்றவற்றை வழங்குகின்றோம். எதிர்காலத்தில் மேலும் பல புதிய தீர்வுகள் மற்றும் சேவைகளையும் நாம் அறிமுகம் செய்வோம்.” என்றார்.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வியாபார தொலைபேசி விவரக் கோவை விளம்பரம், டிஜிட்டல் தொலைபேசி விவரக் கோவை தீர்வுகள், இணைய வடிவமைப்பு தீர்வுகள், நிகழ்வு முகாமைத்துவம், செயற்படுத்தல் மற்றும் வர்த்தக நாம சேவைகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் தீர்வுகள் போன்றவற்றில் SLT- DIGITAL நிபுணத்துவம் பெற்றுள்ளது.

அதனூடாக நாட்டின் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் தெரிவுக்குரிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் தீர்வுகள் வழங்குநராகத் திகழ்கின்றது.

# சர்வதேச மகளிர் தினம்

**'சர்வதேச மகளிர் தினம்' உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் மார்ச் 8ஆம் திகதி அன்று, கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், இலங்கையில் நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களிலும் மகளிர் தின நிகழ்வுகள் மிக விமர்சியாக கொண்டாடப்பட்டன.**

படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்


அம்பாறையில்....



களுவாஞ்சிகுடியில்...


காரைத்தீவில்...


ஹட்டனில்...



மட்டக்களப்பில்...


திருகோணமலையில்...


நிந்தவூரில்...

# இத்தாலி கண்காட்சியில் தங்கச் சிலைகள் கொள்ளை



இத்தாலியில் நடைபெற்ற கண்காட்சியில், பல கோடி ரூபா மதிப்புள்ள, 49 தங்க சிலைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இத்தாலியில் லேக் கர்டா எனும் பகுதிக்கு அருகே கலைப் பொருட்களின் கண்காட்சி ஒன்று கடந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியில் காட்சிப் பொருட்களாகத் தங்கத்தில் செய்யப்பட்ட எண்ணற்ற சிலைகள், மோதிரங்கள் மற்றும் தங்க நகைகள் என்பன வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த 8ஆம் திகதியுடன் இந்த கண்காட்சியை நிறைவு செய்வது என திட்டமிடப்பட்டு இருந்தது. இந்த சூழலில், கண்காட்சியில் இருந்து 49 தங்க சிலைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இதுபற்றி விசாரணை செய்தபோது, சிலைகளில் ஒன்று கண்காட்சி நடைபெறும் வளாகத்தின் மைதானத்தில் இருந்தது தெரிய வந்தது. இந்த சிலையை தவிர, ஏனைய 48 சிலைகளுக்கும் என்ன நடந்தது என தெரியவில்லையெனக் கண்காட்சியை நடத்தும் இத்தாலிய எஸ்டேட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தெரிவித்த எஸ்டேட் தலைவர் கியார்டானோ புரூனோ குவெர்ரி, "சாமர்த்தியமுள்ள ஒரு கும்பலே, இந்த கொள்ளையில் ஈடுபட்டிருக்கிறது. இக்கும்பல் முதலில், எச்சரிக்கை மணியைச் செயலிழக்கச் செய்துவிட்டே கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. சிலையைத் தூக்கிச் செல்லும்போது, அவற்றில் ஒன்று தவறி விழுந்திருக்கும் என தெரிகிறது. அதுவே மீட்கப்பட்டு உள்ளது. எனினும், அந்த கொள்ளையில் ஈடுபட்டவர்கள் யாரெனத் தெரியவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கொள்ளையில் ஈடுபட்டவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதோடு, இது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நாம் தமிழர் கூட்டத்தில் கல்லெறி

## இருவரின் மண்டை உடைந்தது



நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் மர்ம நபர்கள் இருவர் கல்லெறிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதில் நிர்வாகி உட்பட இருவரின் மண்டை உடைந்ததாக பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் ஜெகதீஷ் சந்தர் என்பவரை வேட்பாளராக அறிவித்து திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில், பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேப்பம் பட்டு ஊராட்சியில் நேற்று முன்தினம் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது. இதில், 150க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மர்ம நபர்கள் இருவர் திடீரென கற்களை வீசியதால் பரபரப்பு நிலவியது. இதில், நாம் தமிழர் கட்சி நிர்வாகி சுபிஸ் மற்றும் பொதுமக்கள் இருவரின் தலையில் கல் பலமாகத் தாக்கி காயமடைந்தனர். இதையடுத்து அவர்களை உடனடியாக அருகே இருந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தையல் போடப்பட்டது.

இதுகுறித்து ஆவடி மாநகரம், செவ்வாப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கக் கோரி நாம் தமிழர் கட்சியினர் சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

## குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் பலி



உறவினர்களுடன் குளத்தில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.


தூத்துக்குடி அருகே உள்ள பேரூரணி கிராமத்தை சேர்ந்தவர்கள் லட்சுமணன் - மீனா தம்பதியர். இவர்களுக்கு சந்தியா (13), கிருஷ்ணவேணி (10) என்ற இரண்டு பெண் பிள்ளைகளும் இசக்கி ராஜா (7) என்ற ஆண் பிள்ளையும் இருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் (9) பிற்பகல் இச்சிறுவர்கள் மூவரும், தங்களது உறவினர்களுடன் பேரூரணியில் உள்ள குளத்திற்கு குளிக்கச் சென்றுள்ளனர்.

அப்போது உறவினர்களுக்குத் தெரியாமல் குளத்தில் ஆழமான பகுதிக்குச் சென்ற அந்த மூன்று பேரும், குளத்தில் மூழ்கி, மூச்சுத் திணறி பரிதாபமாக உயிரிழந்தனர். இதையடுத்து அம்மூவரின் உடல்களும் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக தட்டப்பாறை காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### இஸ்லாம் பற்றி அவதூறு:

## மாணவனுக்கு மரண தண்டனை



இஸ்லாமிய மதம் பற்றி அவதூறு கருத்துகள் இடம்பெற்றிருந்த புகைப்படங்கள் மற்றும் காணொலிகளைப் பகிர்ந்த குற்றச்சாட்டில், 22 வயது கல்லூரி மாணவனுக்கு, பாகிஸ்தான் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

பாகிஸ்தானில் இஸ்லாமிய மதம் குறித்து அவதூறு கருத்துகள் தெரிவித்தாலோ, இறைவனை அவமதித்தாலோ அல்லது மத நிந்தனையில் ஈடுபட்டாலோ மரண தண்டனை விதிக்கும் சட்டம் அமுலில் உள்ளது.

இந்நிலையிலே, 2022ஆம் ஆண்டு பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த 22 வயது கல்லூரி மாணவன் இஸ்லாமிய மதம் சார்ந்த தவறான பதிவுகளை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். அதை 17 வயதான சிறுவனும் பகிர்ந்துள்ளான்.

2022ஆம் ஆண்டு நடந்த இச்சம்பவம் தொடர்பாக இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு பஞ்சாப் நீதி மன்றம் விசாரணை நடத்தி வந்தது. இந்நிலையில், இவர்கள் இருவரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து, 22 வயது மாணவனுக்கு மரண தண்டனையும், 17 வயது சிறுவனுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளன.

### கொதிக்கும் நெய்யில்

## வெறும் கையால் அப்பம் சுடும் நிகழ்வு



விருதுநகர் மாவட்டத்தில் சிவராத்திரியை முன்னிட்டு, கொதிக்கும் நெய்யில், வெறும் கையால் அப்பம் சுடும் நிகழ்வு பார்ப்போரை வியக்கச்செய்துள்ளது.

முதல் நாள் இரவில் பாசிப்பயறு, தட்டைப்பயறு, கருப்பட்டி ஆகியவைகளை உரலில் வைத்து இடித்து அப்பத்திற்கு தேவையான இனிப்பு உருண்டை செய்யப்படும். இந்த உருண்டையை இடிப்பதற்கு பெண்கள் நேர்த்திக்கடன் மேற்கொண்டு பயபக்தியுடன் தயார்செய்து கொடுப்பார்கள்.

பின்னர் மகா சிவராத்திரி நள்ளிரவில் முத்தம்மாள் என்ற பாட்டியும் மற்றும் கோயில் பூசாரிகளும் இணைந்து கொதிக்கும் நெய்யில் வெறும் கையால் அப்பம் சுட்டு எடுப்பார்கள். பின்னர் அந்த நெய்யை எடுத்து கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நெற்றியில் பூசி விடுவார்கள்.

மகா சிவராத்திரி அன்று நடைபெறும் இந்த பூஜையில், விரதமிருந்து கலந்து கொண்டு அப்பத்தை வாங்கி உண்பதால் நோய்கள் குணமாகும் என்பதும், குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பதும் நம்பிக்கையாக உள்ளது. இதனால் பல தம்பதிகள் கலந்து கொண்டு ஆசி பெற்று அப்பம் வாங்கிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 – வவுனியா தகுதிகாண் போட்டிகளில்

# சம்பியனாகின விபுலானந்தா, த.ம.ம.வி, சைவப்பிரகாச மகளிர்

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 தொடரின் வட மாகாணத்துக்கான வவுனியா மாவட்ட தகுதிகாண் போட்டிகளின் 12 வயதுகுட்பட்ட பெண்களில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி சம்பியனானதுடன், ஆண்களில் தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சம்பியனானது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் முத்தையன்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை வென்றே சைவப்பிரகாச மகளிர் சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று மூன்றாமிடத்தை விநாயகர் வித்தியாலயம் பெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று த.ம.ம.வி சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தை வென்று அருவித்தோட்டம் சிவானந்த வித்தியாலயம் மூன்றாமிடதைப் பெற்றது.

10 வயதுக்குட்பட்ட ஆண்களில் நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தை வென்று விபுலானந்தா சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் மூன்றுமுறிப்பை வென்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

மேற்குறிப்பட்ட ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் நான்கு அணிகளும் 10 வயதுகுட்பட்ட பெண்களில் பங்கேற்ற நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயமும் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகின.

### புதுக்குடியிருப்பு மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான கோம்பாவில் விக்னேஸ்வரா

நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

ஐந்து ஓவர்கள் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில், சுதந்திரபுரம் இளைஞர் அணியை வென்றே விக்னேஸ்வரா சம்பியனானது. இறுதிப் போட்டியின் நாயகனாக விக்னேஸ்வராவின் குமாரசாமி சதுஜனும், தொடரின் நாயகனாக சுதந்திரபுரம் இளைஞர் அணியின் திலக்கும், அதி கூடிய விக்கெட்டுகளை வீழ்த்தியவராக விக்னேஸ்வராவின் திலகன் தெரிவாகினர். இத்தொடரில் மூன்றாமிடத்தை மூங்கிலாறு அணி பெற்றுக் கொண்டது.

### கல்குடா யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத் தொடர்:

## சம்பியனான மீராவோடை இளம்பிறை






நூருல் ஹுதா உமர்

கல்குடா யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் மூன்றாவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் தொடரில் மீராவோடை இளம்பிறை அணி சம்பியனானது.

32 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் செம்மணோடை சாட்டோ அணியை நான்கு ஓட்டங்களால் வென்றே இளம்பிறை சம்பியனானது.

### லெஜெண்ட்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம்–2024 தொடர்:

## சம்பியனானது அட்டாளைச்சேனை சோபர்

நூருல் ஹுதா உமர்





கல்முனை லெஜெண்ட்ஸ் விளையாட்டுக் கழக லெஜெண்ட்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம்-2024 மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

24 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், அக்கரைப்பற்று டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வென்றே சோபர் சம்பியனாகி சம்பியன் கிண்ணத்தையும், 50,000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றது.

இரண்டாமிடம் பெற்ற டீன் ஸ்டார் 25,000 பணப்பரிசையும், கேடயத்தையும் பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை 11, மார்ச் 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.